சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

MCOP No.123/2020

PW - 2

2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | ராஜ்கண்ணன் |
| க.பெ. (அ) த.பெ. | மல்லன் |
| வயது | 30 |
| முகவரி | கோயமுத்தூர் |

**முதல் விசாரணை**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்போது கோவை கங்கா மருத்துவமனையில் மருத்துவ பதிவேட்டு துறையில் உதவியாளரா பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு மருத்துவமனையில் இருந்து அங்கீகார கடிதம் கொடுத்துள்ளார்கள் அது **சசாஆ 1** ஆக குறியீடு செயப்படுகிறது. மனுதாரர் எங்களது மருத்துவமனையில் இரண்டு முறை உள் நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். முதல் முறையாக மருத்துவ மனையில் சிகிச்சை பெற்ற போது ரூ.2, 05,610/ அவருக்கு சிகிச்சைக்கு செலவானது. மருத்துவ பில்களின் டுப்ளிக்கேட் பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது அது எதிர்தரப்பினரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது **சசாஆ 2** ஆக குறியீடு செயப்படுகிறது. இரண்டாவது முறையாக மகேஸ்வரிக்கு

எவ்வளவு செலவானது என கேட்டால் ரூ.2,45,480/- செலவானது அதற்கான டுப்பிகேட் பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது. அது **சசாஆ 3** ஆக குறியீடு செயப்படுகிறது. அது எதிர்தரப்பினரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. மேலும் எங்களது மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற மகேஸ்வரிக்கு பார்மஸியில் பெற்ற பில்லின் நகல் தாக்கல் செய்யப்படுகிறது அதன் மொத்த தொகை ஞரு.22,556/- ஆகும், அது எதிர்தரப்பினரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது **சசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் மனுதாரர் புறநோயாளியாக சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ பில் தாக்கல் செய்யப்படுகிறது ரூ.36,950/- ஆகும், அது **சசாஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அது எதிர்தரப்பினரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. எங்களது மருத்துவமனையில் மனுதாரர் மொத்தமாக சிகிச்சைக்காவும், மருத்துவத்திற்காகவும் ரூ.5,10,596/- செலவு செய்துள்ளார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் தாக்கல் செய்துள்ள பில்கள் எங்களது மருத்துவமனையில் கொடுக்கப்பட்ட டுப்பிளிகேட் பில்கள் என்றால் சரிதான். எங்களது மருத்துவமனையில் மனுதாரருக்கு அவர் பெற்ற சிகிச்சைக்கு தான் பில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் அது தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பில்கள் எங்களது மருத்துவமனையில் மனுதாரருக்கு கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. ஆகவே என்னால் தாக்கல்

செய்யப்பட்ட மருத்துவ பில்லுக்கான தொகை எதுவும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி